செய்தி வெளியீடு எண்: 110 நாள்: 10.02.2019

## செய்தி வெளியீடு

## சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட பணிகள் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதம்

முதற்கட்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இறுதிப் பகுதியாக A.G. – D.M.S. மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் வரையிலான 10 கிலோ மீட்டர் சுரங்க வழி மெட்ரோ இரயில் போக்குவரத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் இன்று திருப்பூரிலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, 118.9 கிலோ மீட்டர் தூரத்திற்கான இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளை துவங்க உரிய முயற்சிகள் தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டாம் கட்ட திட்டத்தின் முதற்பகுதியாக 50 கிலோ மீட்டர் மெட்ரோ இரயில் கட்டமைப்புகளை உருவாக்கிட ஜப்பான் பன்னாட்டு நிதி நிறுவனம் (JICA) ரூபாய் 20,196 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாம் கட்ட சென்னை மெட்ரோ இரயில் பணிகளுக்கும், முதற்கட்ட பணிகளைப் போல், மத்திய அரசு 50% நிதிப் பங்களிப்பினை வழங்கிடவும், அத்திட்டப் பணிகளை துவக்குவதற்கு உரிய அனுமதியினை துரிதமாக வழங்கிடவும் வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களிடம் இன்று (10.2.2019) நேரில் கடிதம் வழங்கினார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**